
# ஆத்ம ஜோதி.



"நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது"

சோதி 1. சர்வதாரி௵ மார்கழி௴ சுடர் 2.

# ஆத்ம ஜோதி.

## பொருளடக்கம்.


| விஷயம் | | | பக்கம். |
|---|---|---|---|
| 1—ஸ்ரீரமண தோத்திரம் | .... | .... | 25 |
| 2—ரமணானந்தம் | .... | .... | 26 |
| 3—மார்கழிமாச மகிமை | .... | .... | 27 |
| 4—பகவான் ரமணமகர்ஷிகளின் பொன்மொழிகள் | | | 33 |
| 5—ரமண சந்நிதான மகத்துவம் | .... | .... | 34 |
| 6—இன்பகீதம் | .... | .... | 38 |
| 7—சாரதாதேவியார் அருள்மொழிகள் | | .... | 40 |
| 8—சுத்தானந்தர் கீதம் | .... | .... | 42 |
| 9—இஸ்லாத்தின் சமரஸம் | .... | .... | 43 |
| 10—ஸ்ரீபாதமலை (தொடர்ச்சி) | .... | .... | 45 |
| 11—வெண்ணிலாவே! | .... | .... | 47 |
| 12—மணிவாசகப்பெருமான் திருவண்ணாமலையில் ஒருநாள் | | | 48 |
| 13—சமரஸ சன்மார்க்க வாசிகசாலை | | .... | 49 |
| 14—செய்தித் திரட்டு | .... | .... | 51 |



### சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| ஒருவருடம் | ரூபா | 3-00 |
| ஆயுள் சந்தா | ரூபா | 75-00 |
| தனிப்பிரதி | சதம் | 30 |


ஓம்.

# ஆத்ம ஜோதி.

"அருளாலே யுள்ளத் தறிவா யிலங்கும்
பொருளாகி யின்பம் பொலி"—சுத்தானந்தர்.


ஜோதி - 1 | சர்வதாரி௵ மார்கழீ௴ | சுடர் - 2.


## ஸ்ரீரமண தோத்திரம்.

பாலனு யவதரித் திடும்புனித வேளை தனிற்
பார்வைகிழ மாதுக்கீந்தாய்
பாரறிய வன்னைக்குப் பரமபத மளித்தனை
பழனிவடி வேலனென்று
சீலமுடை யன்படியர் சேவிக்க நின்றவர்தஞ்
சென்மநோய் தீர்த்தருளுவாய்
சிறியனேன் றன்னையுன் சீரடிய ருடன்கூட்டிச்
சிவபதங் கருதவைத்தாய்
ஞாலமுழு துன்சொரூப ஞானவொளிக் கதிர்வீச
நாற்றிசையின் மாந்தரெல்லாம்
நாடிவந் துனதுபதஞ் சூடியே வணங்கிட
நற்பத மவர்க்கருளுவாய்
ஆலத்தை யுண்டிட்ட வரனமைத் திடலும்வந்
தருணை தனில் வீற்றிருந்தே [காட்டு
ஐம்பதுட னேரிரண் டாண் டத்யாத்ம நெறி
மழகுரம ணேசகுருவே!

—க. இ.

உ

## ரமணானந்தம்.

ரமணா னந்தத்தெள் ளமுதக் கடலினீ
 ராடிட வாருமினே!
சமரஸ சுத்த சுதந்தர விரிவினிற்
 சகமெலாஞ் சாருமினே! (ரமணா)

நாணா ரவனெனு நாயக மந்திர
 நாதத்தைக் கேளுமினே!
ஞானசக் திபொங்கி நலந்தரு மானந்த
 நர்த்தனங் காணுமினே! (ரமணா)

பற்பல சமயங்கள் பாய்ந்தொரு பொருளெனப்
 பரந்ததைப் பாருமினே!
அற்புத தற்பர சிற்பர வகண்டமாம்
 அருளினைத் தேருமினே! (ரமணா)

அருட்பெருஞ் சோதியா யருணை குபத்திரு
 வழகெங்கும் திகழ்வதைப்பார்!
பொருளிதென் றரும்பெரும் புலவரும் பொன்னடி
 பொருந்திடும் மகிழ்வினைப்பார்! (ரமணா)

தானெனப் புயர்விலாத் தவசக்தி யூற்றெழுந்
 தண்ணடி பூணுமினே!
தானெனுந் தலைவனை நானறத் தன்னுளே
 தானாகக் காணுமினே. (ரமணா)

—சுத்தானந்தம்.

உ

## மார்கழிமாச மகிமை.

ஆசிரியர்.

கீதையில் தமது விபூதியோகத்தைவிளக்கும் அத்தியாயத்தில் கிருஷ்ணபரமாத்மா "சாமங்களில் நான் ப்ருஹத்ஸாமம் என்ற பெரிய சாமம். சந்தங்களில் நான் காயத்திரி; மாசங்களில் நான் மார்கழி; பருவங்களில் மலர் சான்ற இளவேனில்" என்கிறார். (கீதை அXசு 35). எனவே, பன்னிரண்டு மாசங்களுள் விசேடித்தது மார்கழி என்பது வெளிப்படை. சுவர்க்கலோகத்தில் சூட்சுமமாய் போகங்களை அனுபவித்துக்கொண்டு சூக்கும உடலில் வாழும் தேவர்கட்கு காலம் மிகவும் விரைவாய்க் கழிகின்ற காரணத்தால், மனிதரின் ஆண்டு அவர்களுக்கு ஒரு நாளாகின்றது. சூரியன் வடதிசை நோக்கிச் செல்லும் ஆறு மாசம் (உத்தராயணம்) அவர்களுக்குப் பகலாகவும், தென்திசையிற் சஞ்சரிக்கும் ஆறு மாசம் (தட்சிணாயினம்) இரவாகவும பொருந்தியுள்ளது. தட்சிணாயினத்தின் கடைசி மாசமான மார்கழி அவர்களின்இரவின் இறுதியான ஐந்து நாழிகைகளாகின்றன. அதாவது, விடியற்காலைநாலு மணி தொடக்கம் ஆறு மணிவரைக்குமுள்ள காலமாகும்.

இறைவனால் எமக்களிக்கப்பட்டுள்ள இருபத்துநான்கு மணித்தியாலங்களுள், அவனைப் பூசிப்பதற்கு மிகவும் விசேடித்த காலம் இந்த இரண்டு மணித்தியாலமுமேயாம். இக்காரணம் பற்றியே, தொன்று தொட்டு மார்கழி மாசம் முழுவதும் வழிபாட்டுக்காலமாய் இருந்து வந்துள்ளது. மேற் கூறிய காரணம் பற்றி மாத்திரமன்றி. மார்கழி மாசம் முன்பனிக்காலமாய் விடியற்காலையில் குளிர் மிகுந்திருப்பதால், மாந்தர் உடம்பை மூடிப் படுக்கையிலிருக்கவே விரும்புவர். அப்படியான சோம்பலுக்கு இடங்கொடாமல் மக்கள் சுறு சுறுப்பாய் வாழவேண்டுமென்ற கருத்துடைய எமது மூதாதையர், மார்கழிமாசத்தில் சூரிய உதயத்திற்கு முன்னரேயே நீராடவேண்டுமென்ற கட்டுப்பாட்டையும் புகுத்திவிட்டனரெனலாம். சமுதாய வாழ்வில் நன்மைக்குரிய விஷயங்களையெல்லாம் சமயத்துடன் பிணைப்பது அவர்கள் வழக்கம். இந்தமுறையில், உடல், உயிர் இரண்டுக்கும் நலமுண்டாகின்றது. வைகறையில் துயில்நீத்து நீராடுவதால் உடல் உரம்பெற்று மக்கள் நோயின்றி

வாழலாம். அதன்பின் கடவுளைப்பற்றிய பாடல்களைப் பாராயணஞ்செய்து உயிருக்கும் உறுதி தேடிக்கொள்ளலாம். சைவர்கள் மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவையைப்பாடி தில்லைநடராசனைப் பூசிப்பார்கள். வைஷ்ணவர்கள் ஆண்டாள் அருளிய திருப்பாவையைப் பாடி ஸ்ரீரங்கநாதனைப் பூசிப்பர். இவ்விருபாசுரங்களைக் குறித்துச் சிறிது ஆராய்வாம்.

## திருவெம்பாவை.

மாணிக்கவாசகர் திருவண்ணாமலைக்குச் சென்றபோது, ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்சோதிக் காட்சியையே அவரது ஞானக்கண் கண்டது. அவரது ஊனக்கண் கண்டது விடியற்காலையில் பல கன்னியர்கள் ஒருங்குசேர்ந்து பாடிக்கொண்டு குளத்தில் நீராடப் போகுங் காட்சியை. இவ்விரண்டு காட்சிகளையும் பிணைத்து, சில நுட்பமான தத்துவங்களையும் உள்ளடக்கி, பாடப்பெற்றதே இருபது பாடலகளையுடைய திருவெம்பாவையென்னும் பாமாலை. ஒவ்வொரு பாடலும் “ஏல் ஓர் எம்பாவாய்” என்று முடியுங் காரணத்தால் இதற்குத் திருவெம்பாவையென்னும் பேர் வந்தது. அதின் கருத்து: எங்கள் கண்மணி போன்றவளே! நாங்கள் சொல்வதை ஏற்றுக்கொள் என்பதாம். முதல் எட்டுப் பாடல்கள் கன்னியர்கள் தங்கள் தோழிகளை விளிக்கும் பாவனையிலும், பின்னர் சில பாடல்கள் ஒருங்குசேர்ந்த கன்னியர் இறைவனைப் புகழும் முறையிலும், அடுத்தசில பாடல்கள் பிராட்டியைப் புகழ்ந்து சக்தியை வியக்குந் தன்மையிலும், இறுதியில் இறைவனது எளிமையையும் அவன் அடியாரை ஆட்கொள்ளும் அருள் திறத்தையும் விளக்கி, ‘போற்றி! போற்றி” என்ற வணக்கத்துடனும் முடிவடையும். திருவெம்பாவைப்பூசை ஒன்பதுநாள் நடந்து பத்தாம்நாள் உதயத்தில் நடேசர் ஆர்த்திராதரிசனத்தோடு முடிவாகும். இக்காரணம்பற்றியே மார்கழித் திருவாதிரை தனிச்சிறப்புடைத்து. இவ்விழாவுக்கு முக்கிய ஸ்தலம் சிதம்பரமாகும்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
　　போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
　　போற்றியெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
　　போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
　　போற்றியாம் மார்கழிநீராடேலோர் எம்பாவாய்

—மாணிக்கவாசகர்



## திருப்பாவை.

மார்கழி மாசத்தில் சைவர்களுக்கு திருவாதிரை நட்சத்திரம் எவ்வளவு விசேடம் உடைத்தோ, அதே விசேடம் உடைத்து வைஷ்ணவர்கட்கு சுவர்க்கவாயில் ஏகாதசியென அழைக்கப்படுந் திதி. இந்த விழா சிறப்பாக நடப்பது ஸ்ரீரங்கத்திலாகும். அப்போது, பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராய்ப்புகழ்ந்து கொண்டாடப்படும் ஆண்டாள் அருளிய திருப்பாவை யென்னும் முப்பது பாடல்கள் பாடப்படும். வைஷ்ணவ குரு பரம்பரைக்கதைகள் ஆண்டாளின் காலத்தைஐயாயிரம்ஆண்டுகளுக்கப்பால் கணிக்கும். காலத்தைக் கூட்டுவதால் பழமையோடு கூடிய பெருமையுங்கூடுமென்பது சிலர் கருத்து. திருஞானசம்பந்தர் காலம் நாலாயிரம் வருஷங்களுக்கு முன் என்றுபெருமை பாராட்டுஞ்சைவர் இன்றும் உளர். திருப்பாவையின் அமைப்பிலிருந்தே அதை ஆண்டாள் மாணிக்கவாசகரைப் பெரிதும் பின்பற்றியே இயற்றியுள்ளாரென்பது தெற்றென விளங்கும். அத்தோடு, இறுதிப்பாடலில்திருஞானசம்பந்தரின் முறையுங் கையாளப் பட்டிருப்பதால், அவர் காலத்தையே சேர்ந்தவர் அல்லது பிந்தியவர் என எண்ணுவதற்கிடமுண்டு. மாணிக்கவாசகர் கி. பி. நாலாம் நூற்றாண்டைச்சேர்ந்தவரென்பது ஆராய்ச்சியாளர் முடிவு. சம்பந்தர் காலம் ஏழாம் நூற்றாண்டாகும். ஆகையால், ஆண்டாளை அதே நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவரெனக் கூறுதல் தப்பாகாது.

திருப்பாவை திருவெம்பாவையிலும் பார்க்க பத்துப்பாடல்கள் கூடஉடைத்து. முற்பகுதியில் இந்த இருபாமாலைகளிலும் கருத்தொற்றுமை அதிகம் உண்டு. இடைநடுவில், ஆண்டாள் தன் பாவனாசக்தியின் முதிர்ச்சியால், ஸ்ரீ வில்லிபுத்தூரையே கோகுல ஆய்ப்பாடியாக்கிய அற்புதக் காட்சியைக் காண்கின்றோம். கிருஷ்ணனை நாயகனாகக்கொள்ளவிரும்பிய கோபிகாஸ்திரிகள் மார்கழி மாசத்தில் கார்த்தியாயினி தேவியைக்குறித்து நோன்பு அநுஷ்டித்ததாக பாகவதத்தில் ஓர் சிறு கதையுண்டு. பிற்காலத்தில் இந்துக் கன்னியர்கள் இந்த மார்கழி நோன்பை தங்கள் நாடு செழிக்கவும், தங்களுக்கு நல்லநாயகர்கள் சேர்வதற்குமாக நோற்றதுண்டு. கண்ணனையே தனது நாயகனாகக் காதலித்த ஆண்டாள் காலத்திரையை விலக்கி தன்னைக் கோபிகாஸ்திரீகளுள் ஒருத்தியாய்

மாற்றிக்கொண்டதை அவர் இயற்றிய திருப்பாவையில் பரக்கக் காணலாம். இப்பாடல்கள் சில இடங்களில் மாணிக்கவாசகர் வாக்கையும் வென்று மிகவும் ரஸமானமுறையில் அமைந்துள்ளன. இப்போதுசைவர்கள்கொண்டாடுந்தினம் வைஷ்ணவர்களின்விழாக் காலத்திலிருந்து சிலநாட்களால் பிரித்துவைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவினை ஆண்டாள் வாக்கில் இல்லை. சைவர்களின் விசேடநாள் திருவாதிரையோடு பூரணை பொருந்துந் தினமாகும். ஏகாதசியோ பூரணைக்கு முந்தியதாகும். ஆனால், திருப்பாவை முதல் பாட்டே "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாள்" எனப் பூரணையையே குறிக்கின்றது. மேலும், பதின்மூன்றாவது பாட்டில் "வெள்ளியெழுந்தது வியாழம் உறங்கிற்று" என்கிறார் ஆண்டாள். இவ்விரு கோள்களுக்குமிடையே கிட்டத்தட்ட 180 பாகை தூரத்தை இந்தவாக்குத் தருகிறபடியால், சுக்கிரன் சூரியனை அடுத்து நிருதிமூலையானதனுராசியில் எழ, வியாழன் நிறைமதியையடுத்து ஈசான மூலையான மிதுனராசியில் அஸ்தமிக்கும் வேளையெனக் கொள்ளவேண்டும். எனவே, மார்கழித் திருவாதிரையே மறுபடியும் பொருந்துகிறது.

அன்றிவ் உலகம் அளந்தாய் அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச்சகடம் உதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா எடுத்தாய் குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்.

—ஆண்டாள்

## ஸ்ரீ ரமணசந்நிதி முறை—திருவெம்பாவை.

இவ்விதம் சைவர்கள், வைஷ்ணவர்கள் இருபாலாராலும் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கொண்டாடப்பட்டுவரும் இந்த மார்கழி மாசமானது, சென்ற நூற்றாண்டில் பகவான் ஸ்ரீ ரமணமூர்த்தியினதும் தூய அன்னை சாரதா தேவியாரதும் பிறப்புகளாலுஞ் சிறப்புற்றுள்ளது. பகவானது ஜென்ம நட்சத்திரம் மார்கழிப் புனர்பூசம்; அன்னை சாரதா தேவியாரது திருநாள் மார்கழி உத்தரம்.



இவ்விரு புனிததினங்களும் உலகின் நாலாபக்கங்களிலுமுள்ள பக்தகோடிகளால் இன்று கொண்டாடப்படுகின்றன. இக்காரணம்பற்றியே ஸ்ரீ ரமணமூர்த்தியின் திருமுகப்பொலிவு இம்மாச "ஆத்ம ஜோதி"யின்முகப்பை அலங்கரிக்கின்றது. அவரின் வரலாற்றுச்சுருக்கத்தையும் உபதேச மொழிகளையும் அடுத்துவரும் பக்கங்களிற் காணலாம். திருவண்ணாமலையையும் மார்கழி மாசத்தையும் பிணைத்துள்ள ஸ்ரீ ரமணமூர்த்திமீதும் திருவெம்பாவை பாடநேர்ந்தது சாலவும் பொருத்தமுடைத்தன்றோ? இந்த அருந்தொண்டைச்செய்த ஸ்ரீமுகவைக்கண்ண முருகனார் மாணிக்கவாசகரதும் ஆண்டாளதும் வாக்குகளில் அடங்கியிராத பல அத்யாத்ம தத்துவங்களையெல்லாம் நவீன அறிவுலகத்தின் தேவைக்குப் பொருந்த அமைத்துள்ளார். ஞானநெறிகாட்டிய ஆசாரியன்மீது பாடப்பெற்ற தன்மையால், மனமே இங்கு கன்னியாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாடல்கள் முப்பத்துமூன்றும், பெரிதும் ஞானநெறியைச் சார்ந்தனவாதலால், "வட்டமதிமுகத்தோன் மாணடிக்கே சாந்தான்ம நிட்டை நீராடி நிறையேலோ ரெம்பாவாய்", "நானென்னுஞ் சொற்பொருளை நாடியிதயத்தடத்து, நான் கெடநன்காடிநயவேலோரெம்பாவாய்", "ஒருவிகற்பமாக வொளிர்சகசபாவ, நிருவிகற்பமாடி நிறையேலோரெம்பாவாய்" என்பனபோன்ற அரிய முறையில் முடிந்துள்ளன.

வாழி மறைவண்மை வாளுடர் அந்தணர்கள்
வாழிநிறை நீதி வழுவாத நல்லரசு
வாழி விருந்தயரும் வாழ்க்கைத் துணைநலத்தார்
வாழி அகந்தைமல மாசற்ற மாதவத்தோர்
வாழி சிவரமணன் வன்ன மலர்க்கழல்கள்
வாழியவன் அண்ணாமலைப்பதிவ மாண்புறவே
வாழியருட் பார்வை வயப்பட்ட நல்லடியார்
வாழிசிவா னந்த மடுத்தேலோ ரெம்பாவாய்

—முருகனார்

## ஸ்ரீ சாரதாதேவியார்.

தூய அன்னை ஸ்ரீ சாரதாமணிதேவியார் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரது தெய்வீக சகதர்மிணியும் முதல் சிஷ்யையுமாவர். அவர் பிறந்தது 22-12-1853; மஹாசமாதியடைந்தது 20-7-1920. தமது ஆறாம் வயசில் இருபத்துமூன்று வயசான பரமஹம்சருக்கு

மாலைசூட்டி, முப்பத்துமூன்றாவது வயசில் விதவையானார். அவரது புனிதமான வாழ்க்கையின்மூலம் தூயமனைவி, அன்னை, சந்நியாசினி ஆகிய மூன்று பேறுகளையும் அடைந்து, இந்துப் பெண்களுக்குமாத்திரமல்ல உலகின் ஸ்திரீவர்க்கம் முழுவதற்குமே உன்னதமான இல்லறதர்மத்தைப் போதித்துள்ளார். சீதை, சாவித்திரி, தமயந்தி முதலாம் பண்டைக்கால கற்பரசிகளின் வரலாறுகள் கற்பனைக்கதைகள் அல்ல உண்மையாக நடந்தனவே என்பதை நவீன அவநம்பிக்கைமிளிரும் உலகுக்கு தமது வாழ்க்கைமூலம் விளக்கிக்காட்டவே தூய அன்னை அவதரித்தார் எனலாம். 1886ம் ஆண்டில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மஹாசமாதி அடைந்தபின்னர், அன்னையிடம் ஞானோபதேசம் பெற்று உப சாந்த நிலையடைந்த ஆடவரும் மகளிரும் கணக்கிலர். இந்த ஆண்டில் அன்னையாரது ஜென்ம நட்சத்திரம் 22-12-48 அழகாய்ப் பொருந்தியுள்ளது. அன்று அப்பெருமாட்டியைத் தியானித்து அவர் அருளைப்பெறுவோமாக. அவரின் அமிர்த மொழிகளை வேறோர்இடத்தில் தந்துள்ளோம்.

பாரதத்தின் வேதாந்தப் பதியில் வந்து
பாரெல்லாம் ஒளிவீசும் பரம ஹம்ஸர்
தாரமதாய் வைத்துகந்த தையலாளைத்
தாரணிக்கோர் தனியணங்காய்த் தோன்றினாளை
நாரதர்போல் பக்திநெறி நல்கினாளை
நரேந்திரனுக் கருள் சுரந்த நங்கைதன்னைச்
சாரதையார் திருநாமம் படைத்துளாளைச்
சரண்புகுவார் சாந்திநிலை யடைவர் தாமே.

—க. இ

## நத்தார் பெருநாள்

மேலே விளக்கிய விதத்தில், பழமைகுறித்தும் புதுமையைப் பேணியும், கோடிக்கணக்கான இந்துக்களால் விசேடித்த மாசமாகக் கருதப்படும் மார்கழியானது ஏசுக்கிறிஸ்து நாதரின் ஜெனன வைபவத்தை ஒட்டியும் மகிமைபெற்றுள்ளது. கிறிஸ்தவ அரசுகளின் செல்வாக்கு எமது நாட்டில் பரவியகாலந்தொட்டு, கிறிஸ்துமஸ் பண்டிகையானது, சாதி, மத, நிற வித்தியாசமின்றி எல்லா மக்களுக்கும் ஆறுதலும், ஓய்வும் குதூகலமுந் தந்துள்ளது. வெறுங் களியாட்டோடு நின்றுவிடாது, ஏசுபிரான் தமது வாழ்க்கையாலும் மரணத்தாலும் உபதேசித்த அன்பு, பொறுமை, தியா



கம் மூன்றையும் கைப்பிடித்தல் மக்கள் கடமையாகும். அவரது மலைஉபதேசம் தற்போதைய உலகுக்கு அத்தியாவசியமாகும்.

“கோதறு தாவீதீன்ற குலமணிக் கொழுந்தேயென்கோ!
தீதெலாம் பொறுத்திரத்தஞ் சிந்திய தியாகியென்கோ!
பூதலப்பலியாய்த் தன்னைச்சிலுவைசெய் புலவன் என்கோ!
போதலத்குருவேயென்கோ! போற்றியுன்புனித வாழ்வே!

என்று யாமும் யோகி ஸ்ரீ சுத்தானந்தரோடு கூடி, அறநெறிசிறப்பதற்காய்த்தன் ஆவியைப் பலிகொடுத்த அண்ணலை வாழ்த்துவோமாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

---

### பகவான் ரமணமகர்ஷிகளின் பொன்மொழிகள்.

சமூகம் என்பது தேகம் போன்றது என்றும் அச்சமூகத்தைச் சார்ந்தவர்கள் தேக அவயவங்களைப்போல் ஆவார்களென்றும் தேக உறுப்புக்கள் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று உதவிசெய்துகொண்டு சந்தோஷமாய் இருப்பதுபோல் மனிதர்களும் மனோவாக்கு காயங்களால் ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து ஆனந்தமாய் வாழ வேண்டும்.

❋ ❋ ❋ ❋

“நான் யார்?” என்ற ஆத்மவிசாரணையே மோக்ஷத்தைக் கொடுக்கும். இதுவே சர்வ துக்கநிவிருத்திக்கும் பரமானந்த பிராப்திக்கும் முக்கியஹேது.

❋ ❋ ❋ ❋

நீ சத்தியம் ஒன்றையே தேடுபவனாக இருந்தால், உலகம் உண்மையற்றது என்று ஒப்புக்கொள்வதைவிட வேறுவழி உனக்கு இல்லை.

ஓம்

# ரமண சந்நிதான மகத்துவம்.

(திருவருணை உமா எழுதியது)

தனக்குள் தானாகவே சாவின் ஆராய்ச்சி எழுந்து "சாவது உடலே. ஸத்யவஸ்து ஆன்மா. அவ்வழியாப்பொருளே நான்" என்னும் உண்மை புலப்பட்டு அதிலேயே மனம்லயித்து தேகாபிமான வடிவான அகந்தைஇறந்து, உற்றாருறவினர்களையும் ஊரையும் பேரையும் ஒருங்கே துறந்து, மற்றெல்லா நினைவும் ஒழிந்ததன்மயச் சிந்தையனாகத் தந்தை அருணாசலனைக்காண மின்னல் வேகத்தில் திருவருணையடைந்த வேங்கடராமனேசென்றஐம்பத்திரண்டு ஆண்டுகளாக எல்லோருளத்திலும் நிறைந்து ரமித்திடும் ஏகபோக ஆன்ம சொரூபமாக, உலகம் புகழும் உத்தமஞான சற்குருவாக, பகவான் ஸ்ரீ ரமணமஹர்ஷிகளாக விளங்குகிறார்.

வாழ்க்கையின் கரடுமுரடான பாதையை எவ்வாறு கடப்போம்? பள்ளம் மேடு நெருக்கங்கள் ஒருக்கின்றனவே. உய்யும் வகை உணர்த்துவாய் என அபயமாகத் தஞ்சமடைவோருக்கு ஸ்ரீ பகவானே அடைக்கலமருளும் அரண். பட்ட துன்பம்போதும், பாக்கியமருள், நீயேகதி எனத்துயரால் துவண்டு வரும் அன்பர்களின் உள்ளப் பயிர்களுக்கு இன்பவூற்று. நான் சிறியவன், எனக்கென்ன தெரியும், நீயன்றி எதுதான் அசையும், உன் சொரூபத்தை நீயேஉணர்த்தினாலன்றி! உன்னைஎன்னுள்ளே கண்டு, நீயே நானாக நானே நீயாக அத்துவித ஞானானுபவத்தால் நான் என்னுள்ளே அமைதியுறுவது எங்ஙனம் எனக் குழந்தைபோலக் கண்ணைக் கசக்கி நிற்கும் கபடற்ற உள்ளங்களின் கவலையைப்போக்கி, அச்சத்தையும் ஆணவத்தையும் அறவே துடைத்து, அமைதியளித்து ஆதரிக்கும் அன்னை. மண்ணும், பெண்ணும், பொன்னும்போது மென்றாயிற்று, நின்னருளைப் பெறுவதே இன்பம், அப்பெறற்கரும் பேற்றை எமக்கருள் எனப்பதறித் துன்பாலும் துயராலும் வாடும் உள்ளங்களில் தானாக நிறைந்து தண்ணருள் வழங்கும் தந்தை. தம்மையே வெறுத்துத் தாபத்துடன் ஓடிவரும் தாகமிக்காருக்குத் தன்னையே கொடுத்துத் தானாக வாழும் சற்குரு.



எவ்வளவு மூடர்களாயினும் பக்தியோடு ஸ்ரீ பகவானை அண்டினோர்க்குப் பரமசுகம் நிச்சயம். பந்தமற்ற உள்ளமே பரமசுகம். அன்னியத்தை அறிவதே சம்சாரபந்தம். தன்னையறிந்து தன்னில் தானாக அமைதியுறுவதே மோக்ஷம்.

உலகமக்கள் தங்கள் இயல்பை மறந்து அநீதியிற் புகுந்தால், பரம்பொருளே மனிதவடிவில் ஞானகுருவாக அவதரித்து உலகோரை ரக்ஷிக்கிறது. ஆடுமாடுகளைத் தேவதைகளுக்குப் பலிகொடுத்து நன்மையடையலாமென நம்பி ஜீவகாருண்ணியமின்றிக் காட்டுமிராண்டித்தனம் மிகுந்து மக்கள் சீர்கேடடைந்த காலத்தில் புத்தராக அவதரித்து ஜீவகாருண்யமே மோக்ஷத்திற்கு வழியென உபதேசித்தும், அன்பற்றுக் கொடூரத்தன்மை மிகுந்தகாலத்தில் கிருஸ்துவாக அவதரித்து அன்பே மோக்ஷசாதனமென உபதேசித்தும், கடவுள் உண்மையில் உண்டா, அப்படி உண்டென்றால் நீங்கள் கடவுளை நேரிற் கண்டிருக்கின்றீர்களா என்று ஸ்ரீ விவேகானந்தரே கேட்கக்கூடியகாலத்தில் அன்னை காளிதேவி என்ற மாத்திரத்தில் சமாதிநிலை அடையும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சராக அவதரித்து உபாசனையின் பலத்தை உலகுக்கறிவித்தும், பக்தியின்மையும் பேதபுத்தியும் மலிந்து மக்கள் தன்னலம் பேணித் தாழ்வுற்றகாலத்தில் ஸ்ரீராமலிங்கஸ்வாமிகளாக அவதரித்து பக்தியும் சமரச புத்தியுமே மோக்ஷசாதனமென அறிவுறுத்தி அல்லல் நீக்கியதுமான அப்பரம்பொருளே, அகந்தைமீறித் தோள்தட்டி நானென்றெழுந்து ஆர்ப்பரித்து மனித சமூகமே நலங்குலையுமிந்நாளில் பகவான் ஸ்ரீரமணமஹர்ஷிகளாக அவதரித்து, உய்யும் வகையருளும்படி வேண்டிக்கொள்ளும் அன்பர்களுக்கு "உன்னையாரெனப்பார். தோற்றத்திலும் மறைவிலும் நினைப்பிலும் மறப்பிலும் இன்பத்திலும் துன்பத்திலும் விழிப்பிலும் உறக்கத்திலுமாகிய எந்த சந்தர்ப்பத்திலும் நானென்னும் உணர்வுமட்டும் மாறாமலிருக்கும் உன்னையறி. தோற்ற ஒடுக்கமாம் போக்கு வரத்தின்றி நிரந்தரமாக இருக்கும் நான் யார் என்பதை—என் வீடு என் வாசல் என்றாற்போல நானென்றகங்கரிக்கும் உடலுள்ளங்களையும் என்னுடல் என்னுள்ளம் என்று சொல்லிக்கொள்ளும் உன்னை நான் யார் என்பதை—உன்னுள் விசாரித்து யூகித்துணர்ந்தால், போக்குவரத்து இன்பதுன்பங்களோடு கூடிய எவ்வுபாதிகளுமற்ற உன் நின்மல சொரூபம் விளங்கும். உன் சுபாவநிலையாம் இன்பம்

நிறைந்து இரட்டைகளற்று அமைதியுற்று உபசாந்தமெய்துவாய். இந்த சாந்த சுக நிர்விகல்ப நிலையை அடையவேண்டில்மனவொடுக்கந்தான் மிக முக்கியமாக வேண்டும். மனமற்றநிலையே பந்தமற்ற மோக்ஷம். ஜபத்தினாலோ தியானத்தினாலோ மனத்தை அகத்தே ஒருமுகப்படுத்தி நினைவுகளையெல்லாம் நீக்கிப்பார்க்கின்றபோது மனமென்று தனியாக ஒருபொருளில்லை. நினைவுக் கூட்டங்களே மனதின் சொரூபம். பலகால வாசனைப் பழக்கத்தால் நாமரூபங்களைப் பற்றிக்கொண்டு ஓடும் மனதில் அலை அலையாக எழும் நினைவுகளைத் தடுத்து நிறுத்தப் பழகவேண்டும். மன அழிவிற்கு விசாரணையைத் தவிர வேறு உபாயங்களில்லை. எந்த எண்ணமெழினும் "இந்த எண்ணமெல்லாம் யாருக்கு" என விசாரித்தால் எழுந்த எண்ணங்கள் அடங்கிவிடும். இப்படியே நினைவுகளை நீக்கிப் பழகில் மனம் தன்னிலையாம் இதயத்தில் நிற்கப் போதுமான பலம் பெறும். மனதின் எல்லா நினைவுகளுக்கும் 'நான்' என்னும் நினைவே முதல் நினைவு. நினைவுகளைவிட்டு இதயத்தில் நிலைத்த மனதில் நானென்பது போய் தானென்பது மிஞ்சி நின்று சும்மா இருக்கும் சுகநிலைவரும். கொஞ்சமும் நினைவற்ற நிலையே உன் சொரூப நிலையாகும். எந்நினைவும் எழவிடாமல் திடமாகத் தன்னில் நிலைப்பதே வைராக்கியம். தேகத்தை வாட்டுவதும் இருக்கும் மனைவி மக்களைத் துறப்பதும் சரியானவைராக்கியமல்ல. பந்த புத்தி உன்னுள்ளத்தில் இருக்கிறது. புறத்துறவு உண்மைத்துறவல்ல. நானென்றன்னிய மறியாத்தன்மையால் அந்த அகத்துறவியே துறவி. அவனே வைராக்கிய சீலன் வைராக்கிய சித்தன். தூயசன்யாசி. அவனுக்கு வீடும் காடும் ஒன்றுதான். கூட்டத்தால் அலைவுறுவதோ தனிமையால் சாந்தியுறுவதோ சாதன காலத்தில் சகஜமாயினும் அதை சமாளித்துக்கொண்டு எந்நிலையிலும் மாறாத நித்தியசுக நிர்விகற்ப நிலையாம் உன் எதார்த்த நிலையை அறிந்து சாந்திபெறு. நானென்னும் அகந்தையைப் போக்கி உன்னை யாரெனப்பார்த்து தன்னில் தன்னை யுணர்ந்தால் எல்லாமும் தானேயாகும். நினைவுகளெழாது அன்னியமறியாது உறங்கும்போதுள்ள சாந்த சுகத்தை நிரந்தரமாக அநுபவிப்பார். அச்சுகத்தில் உன்னுள்ளேயே தோன்றி உன்னுள்ளேயே ஒடுங்கும் கனவுபோல் இந்த நனவுலகத்தோற்றங்களும் உன்னுள்ளேயே ஒடுங்கிவிடும். பந்தமோக்ஷம் இன்பதுன்பம் தோற்ற ஒடுக்கம் முதலிய இரட்டைக



ளற்ற ஏகசொரூபமும் உன்னை உணர்ந்து சாந்தி பெறுவதே நீ பிறந்ததன் பயன்" என்று உபதேசித்து அவர்களை உய்வித்து வருகிறது.

ஒப்புயர்வற்ற ஞானச்சுடராம் சற்குருபகவானின் சன்னிதி முன் சார்ந்தாருக்கு இயல்பாகவே உள்ளறிவொளி ஓங்கும். சிறு முயற்சியிலும் இடைவெளியின்றி தியானம் தொடர்ந்து நடைபெறும். அருட்போதம் ஓங்கி மருட்போதம் மாறும். சித்த சுத்தியும் ஆன்ம விசாரத்தில் தீவிரமும் ஏற்பட்டு மனோலயம் தானாகவே உண்டாகும். அகந்தை மனம் எப்பொழுது ஆன்மாவில் லயமாகுமோ அப்பொழுது சொரூபம் விளங்கும். ஆன்ம விசாரமே முக்திக்கு வித்து. பகவானின் சன்னிதான மகத்துவமறிந்த எண்ணிறந்த அன்பர்கள் அவரடியிலேயே வாழ்ந்து இன்பம் பெறுகிறார்கள். பகவான் தன் அன்பர்களுக்குச் சொல்லும் மணிமொழிகள் வெகு சுருக்கமாக இருக்கும். ஒவ்வொரு அருள்மொழியும் கேட்பவர் இதயத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்து பலன் நல்கும் சக்தி வாய்ந்தது.

"ஏக பரிபூரணமாகிய அறிவே ஆன்மா. அதுவே பிரம்ம சொரூபம். அறிவற்றதும் ஆதியந்த மற்றதுமான ஆன்மாவொன்றே உள்ளபொருள். மனமே சங்கற்பவிகற்பங்களைக் கற்பிப்பது பனமொழிந்து தன்னிலையில் நிற்பதே சமாதியாகும். தனக்கு அயலாக எதுவுமில்லை என்று மனச்சலனமின்றி மலைபோலசையாது ஆன்மாவில் நிலைத்து நிற்பதே விசாரத்தின் பலன். விஷயங்களை ஆன்மாவிற் கன்னியமாகக்காணும் பேதபுத்தியே பந்தம். பிரம்மம் ஒன்றேயுள்ளது, அதுவே நான் என்னும் நிச்சயபுத்தியுள்ளவனது மனத்தை உலகமாயை அசைக்கமுடியாது. இறைவனிடம் உன் பொறுப்பைச் சுமத்திவிட்டு சஞ்சலமற்றுச் சலிப்பற்று தீரமாக முயற்சி செய். மற்றக்காரியங்களை இறைவன் ஏற்றுக்கொள்வான். அவன் தன்னை நம்பித் தம்மை ஒப்புக்கொடுப்பவரின் கவலைகளைக் களைந்து மனச்சாந்தியளிக்கும் கருணை சொரூபன். தீவிரமாகத் தன்னிடத்தில் நம்பிக்கையோடு சாதனையிற் புகும் அன்பர்களின் அவாவை சாத்தியமாக்கி அருள்வான்" என்று சொல்லித் தெளிவையும் தீரத்தையும் ஊட்டுவதாகும் அருட்குரு பகவானின் அமுதமொழிகள்.

# இன்பகீதம்.

மாநிலத் துற்ற மாசிலா மணிகாள்
ஏனிவ் வுறக்கம் எழுந்துநீர் வம்மின்
தோற்றுவ தொழியும் ஒழிவது தோன்றும்
தோற்றமு மறைவு மின்றியே யிதயத்
தலத்தே யொளிரும் தன்மயப் பொருளினை
நலந்தி தற்ற நாத முடிவினை
நானு னென்னு நந்தா மணியினை
தேனு ரமுதைத் தெவிட்டாக் கனியினை
வாடா மலரினை வற்றாக் கடலினை
ஆடா மனத்தா லசைவற நோக்கி
அருளினுக் குருவினை அன்பினுக் கியல்பினை
பொருளினுக் குண்மையைப் போதத்தின் நுண்மையை
அற்புத ரமணனை ஆனந்தா நிதனை
சொற்பதங் கடந்த சோதியை யடைமின்.
அனித்திய வுலக மங்கிலை யதனால்
மனிதனுக் கியலபா மயக்கமங் கில்லை
விருப்பொடு வெறுப்பு வித்தது விளைத்த
இருவினைப் பயன்க ளில்லா தொழிந்திடும்
நான்நீ யவனிவ னதுவிது வென்னும்
பான்மையங் கென்றும் பற்றிடா தொழியும்
ஆசையால் விளையு மனர்த்தமங் கில்லை
பாசையா லுற்ற மாசுமங் கில்லை
வளமையும் வறுமையும் வாய்மையும் பொய்மையும்
இளமையு முதுமையு மில்லா தொழிந்திடும்
பேதமொன் றில்லாப் பேச்சறு நிலையில்
வாதனைத் திரள்களின் வாதுமங் கில்லை
காலமுங் காலக் கோலமு மங்கிலை
காலனி னச்சக் கருத்துமங் கில்லை
வினையைச் சடமென விலக்கியுள் ளாழ்ந்தால்
வினைப்போர்க் களமாம் வியனுல கில்லை



விவகரித் திடவோர் விஷயமங் கில்லை
தவத்தொடு ஞான சாதன மில்லை
எண்ணிட மனமு மியம்பிடச் சொல்லும்
கண்ணினாற் காணக் காட்சியு மங்கிலை
போகமும் பலனும் புசிப்புமங் கில்லை
ஏகன்நா னென்னுமவ் வெண்ணமு மில்லை
அன்னிய மறியாத் தன்மய நிலையில்
இன்பதுன் பங்களா மிரட்டைக ளில்லை
காணு முலகின் காட்சியு நாமே
பூணும் பொருளும் போகமு நாமே
உள்ள பொருள்களி னுட்பொருள் நாமே
உள்ளலொன் றற்றவுள் ளுணர்வுரு நாமே
நானென நம்முள் நடம்புரி ரமணன்
மோனமா யுணர்த்தின் முழுப்பொரு ளாவோம்
இன்பச் சுடரா யிதயத் திருந்தே
அன்பே சிவமா யமைதியுற் றிடுவோம்
எனதுயா னென்ற இயல்புக ளற்றால்
தனதென யாவுந் தன்னிலே சாரும்
காற்றினைப் போலநாம் கட்டிலா துலவும்
சாற்றுதற் கரிய சாந்தியுற் றிடுவோம்
கதிரவன் முன்பு காரிரு ளுளதோ
விதிமதிக் கப்பால் விளங்கிடுந் தெய்வ
ரமணனை யுளத்தில் ரமித்திடும் பதத்தில்
ரமணனே நாமாய் ரமிப்பிலாப் பதமுறும்
ரமணனே யுள்ளம் ரமணனே யுலகு
ரமணனே யிதயம் ரமணனே மோக்ஷம்
ரமணனே சத்தாம் ரமணனே சித்தாம்
ரமணனே யின்பாம் ரமணனே சாந்தி
சற்குரு ரமணனைச் சார்ந்தின் புற்றே
நற்பதத் தமுதினை யருந்திட வாரீர்
வேண்டுத லற்ற விழுமிய பதமருள்
ஆண்டவன் ரமணனி னடியினைச் சார்மின்.

---

# சாரதாதேவியார் அருள்மொழிகள்.

—0—

### அவருக்கு உறவினர்கொடுத்த உபத்திரவமும் பக்தர்கள் அளித்த பேரன்பும்.

### ஒரேநாள் நிகழ்ச்சிகள்.

சுவாமி அரூபானந்தரின் வங்காள நூலிலிருந்து எடுக்கப்பட்டவை
தமிழாக்கம்; R. இராமகிருஷ்ணன், M. A. L. T.

### 1912-ம் ஆண்டு மே மாசம் முற்பகல்.

அன்னையார் ஜயராம்பாடிக்கு எப்பொழுது திரும்பிவருவாரென்று ஓர் பக்தர் கேட்டிருந்தார். "முன் குளிர்காலத்தில் ஜகத்தாத்ரி பூஜைசமயத்தில் நீங்கள் அங்கு திரும்புவீர்களென்று அந்தப் பக்தருக்குத் தெரிவிக்கின்றேன்" என்று நான் அன்னைக்குக் கூறினேன்.

**அன்னையார்:**—வேண்டாம், வேண்டாம், அதைப் பற்றி நிச்சயமாகக் கூறமுடியுமா என்ன? நான் எங்கிருப்பேன் என்பது முற்றிலும் பகவத் சித்தத்தைப் பொறுத்ததாகும். இன்று இருக்கின்றவன் நாளை இல்லாது போகின்றான்.

**சீடர்:**- தாயே, நீங்கள் ஏன் இவ்வாறு பேசவேண்டும்? நீங்கள் உயிருடனிருப்பதால்தான் பலசனங்கள் உங்களைக்காண்பதும் மனச்சாந்தி பெறுவதும் சாத்தியமாகின்றன.

**அன்னையார்:**—ஆம் அது உண்மைதான்.

சீடர்:—எங்கள் பொருட்டு சீவித்திருப்பீர்களாக. [உணர்ச்சி மிகுதியால் சரியாகப் பேசமுடியாத வகையில், பரிவு மிகுந்த குரலில் அன்னையார் ' ஆகா, இவர்களெல்லாம்என் மீது என்ன அன்பு கொண்டுள்ளனர்? நானும் அவர்களிடம்பேரன்பு கொண்டுள்ளேன்" எனக்கூறினார்.

அன்னையின் கண்கள் கண்ணீரால் நனைந்திருந்தன. சீடர் அவருக்கு விசிறிக்கொண்டிருந்தார். கருணை மிகுந்த குரலில்



அன்னை சீடரை நோக்கி:— அன்பரே! என் இருதய பூர்வமாக உம்மை நான் ஆசீர்வதிக்கின்றேன். நீர் நீண்டகாலம் வாழ்வீராக, பக்தியைப் பெறுவீராக, சாந்தியை அனுபவிப்பீராக, சாந்திதான் முக்கியமானவிஷயமாகும். சாந்தியொன்றே ஒருவனுக்கு அவசியமான பொருள் என்று சொன்னார்.

### அதே நாள் பிற்பகல்

அன்னைக்குவந்த கடிதங்களுடன் நான் மாடிக்குச்சென்றேன் அன்னையின் சீடர்களுள் ஒருவர் காசியில் இறந்துபோனார். இச்செய்தியைக் கேட்டதும் அன்னையார் "யாவரும் ஒருநாள் இறக்கவேண்டியதுதான். குட்டையிலோ குளத்தின் கரையிலோ இறந்து படுவதற்குப் பதிலாக இவர் காசியில் காலமானார்" என்று கூறினார்.

அன்னையின் சகோதரர்கள் தங்கள் குடும்பத் தகராறுகளைப் பற்றிக்கூறிப் பணம் வேண்டுமென்றும் கடிதம் எழுதியிருந்தனர். அவர்களுக்கு நிறையப்பணம் கிடைக்குமாறு செய்யுங்கள். குருதேவருக்கு இதைப்பற்றி விஞ்ஞாபனம் செய்யுங்கள். இகலோக வாழ்க்கையை அவர்கள் நன்றாகச் சுகித்து ஆசை நிறைவு பெறட்டும் என்று நான் அன்னையிடம் தெரிவித்துக்கொண்டேன்.

**அன்னையார்:**— அவர்களுக்கு என்றாவது ஆசை நிறைவு ஏற்படுமா என்ன? அவர்களுக்கு எதனாலும் திருப்தி ஏற்படாது. ஆம், நிறைய சம்பத்து இருந்தாலும்கூட அவர்களுக்குத் திருப்தி ஏற்படாது. போகங்களில் உலகமக்கள் எப்பொழுதேனும் ஆசை நிறைவு காண்கின்றனரா, என்ன? தங்களுடைய துயர்க் கதையையே அவர்கள் எப்பொழுதும் திரித்துக்கொண்டிருக்கின்றனர்.

சீடர்:— இந்தக்குடும்பத்தில் ஏன் தாயே! நீங்கள் ஜனனமெடுத்தீர்கள்?

**அன்னையார்:**— ஏனோ? எனது தந்தையும் தாயும் வெகு நல்லவர்களாயிற்றே.

---

**பகவானுடைய படத்திலும் அவர் இருப்பது உண்மை. உடம்பும் அதன் நிழலும் ஒன்றே; படம் அவருடைய நிழலே, ஆதலில், பகவானுடைய படத்தின் முன்பு அடிக்**

கடி நீ பிரார்த்திப்பாயானால், அப்படத்தின் மூலமாகவும் அவர் தரிசனமளிப்பார்; படம் இருக்கும் இடமும் கோயிலாகும் அவர்க்குமுன் நாம் அன்போடுவைக்கும் உணவை அவர் ஏற்றுக்கொள்வார்.

---

மனம் அடங்கியிருக்கும்போது மந்திரத்தை (பகவானது நாமத்தை) ஒருமுறை உச்சரிப்பது, பகவானை விட்டு மனம் அலையும்போது இலக்ஷம் தரம் உச்சரிப்பதற்குச் சமமாகும். நாள் முழுவதும் நாமத்தை ஜெபித்தாலும் சரி, மனம் வேறிடத்தில் இருந்தால் அதிகம் பலன் வராது, உச்சரிக்கும்போதே மனம் அதில் நிலைத்து நிற்கவேண்டும்; அப்போதுதான் பகவானது அருள் உண்டாகும்.

---

## சுத்தானந்தர் கடிதம்.

புதுயுக நிலையம்,
புதுவை.

அன்ப,

அறி; அன்புசெய், அச்சமில்லை. புலவன் கையாழ்போல், வாழ்க்கை இன்பப் பண்ணொலிக்கும். தூய்மை, வாய்மை மனவொருமை, அன்புரிமை, ஆன்மநேயம், அருளுணர்வு, உலகாலயப்பணி—இவையே உயிர் யாழின் ஏழிசைகள். இந்த இசைப் பயனே இறைமை, கடவுட்டன்மை. அறம் வேர், பொருள் அடிமரம், இன்பம் கிளைகள், அருள் மலர், அறிவு கனி, தூய கடவுளின்பம் அதன் சுவை—வாழ்வுக்கற்பகத்தைவளர்! அதில் அமரத்தன்மை கூடுகட்டிவாழும். வேதப்பறவை பாடும்.

கட்டுங் கவலையும் மனத்தினவே. மனதைத் தாண்டி, உள்ளான்மாவில் தியானத்தால் ஊன்றிக்கொள். அதுவே யோகம்; வாழ்வுயோகக் கொடிபரவித் தூய அருளின்பங்கனிக! உயிர் அமுத வூற்றுருக! அதற்கு ஒரே சாதகம்:—

இயல்பான வுன்னை இயல்பாயறிந்தே,
இயல்பாகி யின்புற்றிரு.

ஓம் சுத்த சக்தி
**சுத்தானந்த பாரதி.**

## இஸ்லாத்தின் சமரஸம்.

(சமரஸப் பித்தன்)

இந்துக்கள் சமயத்தொடர்புடைய எக்கூட்டத்தையும், கொண்டாட்டத்தையும், "உலகில் எல்லாரும் சேமமடையட்டும், ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!" என்று கூறியே முடிப்பது வழக்கம். அவர்களின் சமரஸ மனப்பான்மைக்கு இது ஓர் ஒப்பற்ற உதாரணமாகும். நபி நாயகத்தால் அரேபியாவில் நிறுவப்பட்ட மதம் 'இஸ்லாம்' என அழைக்கப்படுகிறது. இந்தப்பதத்தின் கருத்து நாம் மேலே குறிப்பிட்ட 'சாந்தி'யேயாம். இதிலிருந்தே, இஸ்லாமின் கொள்கை வாள் என்று கொள்பவர்களின் அறியாமையும் மதவெறியும் வெளியாகின்றது.

மதம் வேறு மதவெறி வேறாகும். மதவெறி ஒரு குறித்த மதத்தினருக்குத்தான் தனியுடைமையாய் இருந்துள்ளதெனக் கூறமுடியாது. அது எல்லாமதத்தினர்க்கும் பொதுவுடைமையாகவே இருந்துள்ளதெனலாம். அறிவுப் பெருக்கம் பரந்துள்ள, ஒரு சமூகத்தினர் இன்னொரு சமூகத்தினருடன் மிகவும் நெருங்கி வாழவேண்டிய நியதிகள் சந்தர்ப்பங்கள், பிரயாண வசதிகள் மலிந்துள்ள இந்த இருபதாம் நூற்றாண்டில்தானும், மதவெறி பல இடங்களில் தலைகாட்டவே செய்கிறது. இந்த முறையில் ஒருமதத்தின் பேரால் அறிவிலிகள் சிலர் செய்யும் அட்டூழியங்களுக்காக அம்மதத்தையே தூஷிப்பதோ வெறுப்பதோ முறையல்ல.

உலகிலுள்ள முக்கிய சமயங்களின் அடிப்படையான உண்மைகளை விருப்பு வெறுப்புகளின்றி ஆராய்ந்துபார்ப்போருக்கு, அவற்றில் மாறுபாடுகள் இருப்பதாகத் தோன்றுவதில்லை.

எங்குமுள்ள ஈசனார் எம்முடல் புகுந்தபின்பு,
பங்குகூறு பேசுவார் பாடுசென்று அணுகிலார்.
எங்கள்தெய்வம் உங்கள்தெய்வம் என்று பேதமுள்ளதோ?
உங்கள்பேதமன்றி யந்த உண்மைபேத மில்லையே.

இது சிவவாக்கியர் பாடல். இந்தப்பாட்டில் அடங்கியுள்ள சமரஸ நெறியை திருக்குரானிலும் காண்கின்றோம். உதாரணங்கள்:—

1. ஆண்டவனுடைய இச்சை அப்படியிருந்திருக்குமாயின் உலகத்திலுள்ளவர்களெல்லாம் ஒரே மனப்பான்மையைப் பெற்றிருப்பர். மனிதர்களைக் கட்டாயப்படுத்தி முஸ்லிம்களாக்குவது தகுமா? (சுரா. 10. சுலோகம் 99)

2. நீ வணங்குகின்ற விதத்தில் நான் வணங்குவதில்லை; நான் வணங்குவதைப்போன்று நீ வணங்குவதில்லை. உனக்கு உரியது உன்னுடைய மார்க்கம். எனக்கு உரியது என்னுடைய மார்க்கம். (சுரா. 109. சுலோகங்கள் 1—6)

3. கடவுளைத்தவிர வேறு எது எதையே வணங்குகின்றவர்களை நீ கண்டிக்காதே. அப்படிக் கண்டிப்பதால் அவர்கள் கெடுவார்கள், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித வழிபாடு அளிக்கப்பட்டிருக்கிறது. யாருக்கு எத்தகைய செயல் சிறந்ததென்று கடவுளே காண்பிப்பார். (சுரா. 6. சுலோகம் 108)

4. கடவுள் விரும்பியிருப்பாராகில் உங்கள் எல்லோரையும் ஒரே வம்சத்தவராகப் படைத்திருப்பார். ஆனால், ஒவ்வொருவரையும் ஒவ்வொருவிதமாகப் படைத்து அவர் உங்கள் இயல்பைப் பரிசோதிக்கிறார். ஆகையால் நற்செய்கையில் உற்சாகமுடையவர்களாயிருங்கள். கடவுளிடம் நீங்கள் எல்லோரும் திரும்பிப் போவீர்கள். அப்போது உங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளை அவரே தீர்த்துவிடுவார். (சுரா. 51. சுலோகம் 53)

5. எங்கள் தெய்வமும் உங்கள் தெய்வமும் ஒருவரே. அவரை அடைய நாம் எல்லோரும் :முயல்வோமாக, (சுரா. 29. சுலோகம் 45)

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

22-ம் பக்கத் தொடர்ச்சி.

# ஸ்ரீ பாதமலை.

குல-சபாநாதன்.

இம்மலையின் உயரம் 7360 அடி. இதன் உச்சிக்கு ஏறுவதற்கு இருவழிகளுள. ஹட்டனிலிருந்து மஸ்கேலியாவுக்குச் சென்று, தேயிலைத் தோட்டப்பாதை வழியாக மலையடிவாரம் சென்று கால்நடையாகவே ஏறிச்செல்லலாம். யாத்திரீகர்கள் தங்குவதற்கு ஏற்ற அம்பலங்களுண்டு. செல்லும் வழியில் சீதா கங்கையில் தீர்த்தமாடிக் களைப்பு நீங்கி ஆறுதலாக ஏறலாம். இரவிலே ஏறுவது அதிக சிரமமில்லை யாதலால், யாத்திரை செய்வோர் கைவிளக்குகளுடனும் தீவட்டிகளுடனும் "சாது சாது" "ஹரோஹரா" "அல்லாஹ் அக்பர்" என்று பக்தியுடன் உச்சரித்துக் கொண்டு செல்வார்கள். வழிநடைச் சிந்துகளைப் பயபக்தியுடன் படித்துக்கொண்டு செல்வார்கள். 'கருணாவ' என்ற சிங்களச் சொல் துன்பம் தீர்க்கும் மருந்தாகக் காணப்படுகிறது. சிற்சில இடங்களில் பாதை மிகவும் செங்குத்தாக இருத்தலின், அதற்குப் படிகள் அமைத்திருக்கின்றனர். அன்றியும் இரும்புக் கம்பிகளும் பிடித்தேறுவதற்கு ஆதாரமாக அமைத்திருக்கின்றனர். பண்டைக்காலத்தில் இரத்தினபுரி வழியால் சங்கிலிகளின் உதவிகொண்டு பலர் யாத்திரை செய்தனர். இவ்வழி மிகவும் அபாயமானது. ஆனால் எவ்வளவு துன்பத்தை அடைந்து ஒருவன் செல்கின்றானோ அதற்கேற்றபலன் அவனுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையினால், இவ்வழியாகச்செல்லும் பக்தர்களும் காணப்படுகின்றனர்.

மலையின் உச்சிக்கேறியதும் அங்குள்ள பாதச்சுவட்டின்மேல் மலர்களைத்தூவி காணிக்கையிட்டு வாசனைத்திரவியங்களை வைத்து வணங்குகின்றனர். சிலர் தங்கள் சிரசு அடிச்சுவட்டில் படும்படி தலைகுனிந்து நமஸ்கரிக்கின்றனர். பக்திமேலீட்டினால் இன்னுஞ் சில பக்தர்கள் தத்தம் மனம்போனவாறு கூத்தாடி வழிபடுகின்றனர். பின்பு உச்சியில் ஒரு சிறு அறையில் புத்தருடைய திருவுருவங்களும் சமன் என்னும் தெய்வத்தின் திருவுருவமும் காணப்படு

கின்றன. அவற்றையும் வணங்கிய பின்னர் யாத்திரீகர் அங்குள்ள மணியொன்றை அடிப்பார்கள். ஒருவர் எத்தனைமுறை அந்த ஸ்தலத்துக்கு யாத்திரை செய்தாரோ அத்தனைமுறை அந்த மணியை அடிப்பது வழக்கம்.

பக்தர்கள் இரவிலே யாத்திரை செய்து பெரும்பாலும் விடியற்காலை 4 மணிக்கு அல்லது 5 மணிக்கு முன்னதாக உச்சிக்கு வந்து சேர்ந்துவிடுவார்கள். அடிச்சுவட்டை வணங்கியபின் எல்லாச் சமயத்தவரும் கிழக்குத் திசையை நோக்கி நிற்பர். அந்நேரத்தில் குளிருக்கு குறைவிராது. சிறிது சிறிதாகக் குணதிசையில் அடிவானம் வெள்ளை வெளேரென வெளுத்திருக்கும். பின்பு சிறிது சிறிதாகச் சிவப்பு வர்ணம் திடடப்பெற்று கிழக்குத்திசைவானம் செக்கச் செவேலெனக் காட்சியளிக்கும். சிறிது நேரத்தால் சிவந்த அனல் உருண்டைபோலச் சூரியன் குணதிசையில் உதயமாகின்றான். அப்பொழுது சூரியவணக்கம் ஆரம்பமாகின்றது. முதற்கண் சூரியன் தனது முழு உருவத்தையும் காட்டி விட்டுத் திடீரெனத்தன் அடிப்பாகத்தைக் கீழே இறக்கிவிடுகிறது. சில வினாடிகளின் பின்னர் வழக்கம்போல் கிரணங்களைப்பரப்பி உதயமாகின்றது. சூரியனும் இம்மலையை நமஸ்கரித்தே செல்கிறான் எனப் பக்தர்கள் நம்புகின்றார்கள். சூரியோதயமானதும் பனிப்படலம் ஓடி மறைவதைப் பார்ப்பதே கண் கொள்ளாக் காட்சியாக விருக்கும். சூரிய வழிபாட்டை நிறைவேற்றிய பின்னர் மேற்குத் திசையை நோக்கிப் பார்த்தால் சிவனொளி பாதமலையின் அழகிய நீல நிற நிழலைக்காணலாம். மலையின் உருவத்தை நிழல் மிக அழகாகக் காட்டி நிற்கும். உச்சியில் இருந்து பார்க்கும் பொழுது பச்சைப்பசேலென்ற பசும் புற்றரைகள் நாலுதிசைகளிலும் காணப்படும். இயற்கையன்னையின் எழிலும் சூரியோதயத்தின் சிறப்பும் பக்தர்களுடைய தூய உள்ளத்தில் ஊன்றிப் பதிந்து ஒருவித மனப் பண்பாட்டை உண்டாக்கிவிடுகின்றன. ஏதோ ஒரு பெரிய பாரத்தை இறக்கிவிட்டு வருபவர்கள்போலவே பக்தர்கள் குழந்தையுள்ளத்துடன் இறைவனை நேரிற்கண்டு வழிபட்ட உணர்ச்சியுடன் மலையிலிருந்து இறங்கி வருகிறார்கள்.

இங்ஙனம் எல்லாச் சமயத்தவரும் தத்தம் சமயத்துக்குரிய மலையாக இதனை இழுத்துக்கொள்ள முயல்கின்றனர். எனினும்



இத்தகைய சிறு பூசல்களால் சிறிதளவேனும் நிலைகுலையாது, ஒரே தன்மைத்தாய் வானளாவி உயர்ந்து நின்று, எல்லாச்சமயத்தார்களையும் தன்னகத்தே இழுக்கும் ஆற்றலொடு விளங்குகின்றது. இம்மலையுச்சியிலுள்ள பாதச்சுவட்டினைக் காண்பதற்கு, மலையடிவாரத்திலிருந்து பல படிகளைக்கடந்து செல்வதையொப்ப, இறைவன் திருவடிநிழலையடைதற்கு அமைந்த படிகளே பல சமயங்களாகும். அன்றியும் உச்சியையடைவதற்கு மஸ்கேலியா வழி, இரத்தினபுரிவழியெனப் பலவழிகள் இருப்பதுபோலவே சமயங்களும் அமைந்துள்ளன எனினும் ஒக்கும். என் தெய்வம் உன் தெய்வம் என்று சமயவாதஞ்செய்வதில் காலத்தை வீணே கழிக்காமல், எல்லாச்சமயத்திற்கும் அதீதராய் கடவுள் ஒருவர் இருக்கின்றார் எனும் சமரச நன்னிலையைப் போதித்து நிற்பது ஸ்ரீ பாதமலை யொன்றேயன்றோ? சமயவாதிகள் மட்டுமன்றி அரசியல் வாதிகளும் இதனைப் போற்றுகின்றனர். சுதந்திர இலங்கையின் தேசியக்கொடிக்குச் சிறந்த சின்னமாக இம்மலையின் உருவத்தை கொள்ளலாமெனச் சிலர் ஆலோசனை கூறியதும் ஈண்டு நினைவு கூர்தற்பாற்று.

---

## வெண்ணிலாவே !

[கன்னிக்கவி]

அன்னையின் அன்பு மடியில் தவழ்ந்தே, வெண்ணிலாவே....ஒளி
யின்னமுதினை யுண்டுகளியாயோ, வெண்ணிலாவே ! (1)

நோக்குந்திசை யெல்லாம் அவளேயே, வெண்ணிலாவே....எங்கும்
நோக்க நோக்க அன்னைவடிவமேயே, வெண்ணிலாவே ! (2)

அன்புவெள்ளமே ஆதிசக்தி காண், வெண்ணிலாவே....இனி
துன்பமேதமிலை தாயின் நினைவிதால், வெண்ணிலாவே ! (3)

சுத்த அறிவதே சிவமென்றுணர், வெண்ணிலாவே....இனி
பித்த மதங்களின் பேதமைகொள்ளாதே, வெண்ணிலாவே ! (4)

போத புத்தனைப் போற்றும் புவியிலே, வெண்ணிலாவே....இன்று
'ஜோதி' ஒளிர்ந்து ஜகமெங்கும் பாயுது, வெண்ணிலாவே ! (5)

# மணிவாசகப் பெருமான்.

## திருவண்ணாமலையில் ஓர்நாள்.

"முத்து"

மார்கழி மாசம், நேரம் விடியற்காலை நான்குமணியிருக்கும். மணிவாசகப்பெருமான் அண்ணாமலை அப்பனை ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியை, ஆராதிப்பான் வேண்டி திருக்கோயில் நோக்கி வருகின்றார்.

அவருக்கு முன்னே தூரத்தில் கூட்டமொன்று செல்லுகிறது போல் தோற்றுகிறது. சத்தம் கேட்கிறது; எட்டிநடந்தார்; சத்தம் என்னவென்று இப்போ விளங்கிவிட்டது. அன்பர் கூட்டமொன்று

"ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
சிவசிவ சிவசிவ சிவாய நமஓம்"

என்ற நாமாவளியுடன் திருக்கோயில் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

அந்த நாமாவளியில்லயித்த பெருமான் கூட்டத்தைக்கிட்டச் சேர்ந்துவிட்டார். கூட்டம் ஒரு இடத்தில் நிற்கிறது. பெருமான் இத்தாய்மார் ஏன் நிற்கிறார்கள் என்பதை அவதானித்தார்.

அவ்வீட்டிலுள்ள தாயைக் கோயிலுக்கு வரும்படி அழைக்கிறார்கள். கதவோ திறக்கப்படவில்லை. கூட்டத்தில் நின்ற தாய்மாரில் ஒருவர் கூறுகிறார், ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியை யாம் பாடக் கேட்டுக்கொண்டிருந்தும் தாயே உனக்கு இன்னும் உறக்கமா? உனது செவிதான் இவ்வளவு வன்மையுடையதா?

அந்தநேரத்தில் இன்னொருதாயார் கதவின் துவாரத்தின் வழியாக உள்ளே பார்க்கிறார். உள்ளே படுத்திருந்த தாயார் படுக்கையில் விம்மி விம்மி அழுவதைக் காண்கிறார். உள்ளேபடுத்திருந்தவர் ஏன் அழவேண்டும். அந்தப் பனிக்காலத்திலே எழுந்து கோயிலுக்குப்போவதால் துன்பம் நேருமே என்று அழுகிறாரா? இல்லை. காரணத்தையும் ஒருதாய் கண்டுபிடித்து விடுகிறார்.

தொடர்ச்சி 52ம் பக்கம்

# சமரஸ சன்மார்க்க வாசிகசாலை.

——:—:——:—:——

[கடவுளுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள அத்யாத்ம உறவைவிளக்கி, சமரஸநெறியைப் போதிக்கும் நூல்களைப்பற்றிய மதிப்புரையே இப்பக்கத்தில் வெளிவரும். அப்படியில்லாமல் துவேஷத்தையோ வேற்றுமையையோ தூண்டும் வெளியீடுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டா—ஆசிரியர்]

குங்குமம்: திங்கள் வெளியீடு:—
ஆசிரியை:
ஸ்ரீமதி எஸ். விசாலாக்ஷி,
பச்சையப்பன் ஹாஸ்டல் ரோட்,
சென்னை 10.

மங்கையரின் மதிமுகத்திற் பொங்கும் அழகிற்கு மங்களந்தருவது குங்குமமேயாம். இந்த உண்மையை இன்று பௌத்தமத கிறிஸ்தவப் பெண்கள் தாமும் உணர்ந்துகொண்டனர். எனவே மேலே குறிப்பிட்ட மாதாந்த சஞ்சிகைக்குக் 'குங்குமம்' என்ற நாமம் மிகவும் பொருத்தமுடைத்து. பழைய அஸ்தினபுரத்திலிருந்து திசைகாட்டும் பாதையில் நின்று இந்தியாவை இன்று அரசாளும் சக்கரவர்த்தி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்களின் "தமிழ்ப்பெண்கள் நெற்றியில் எப்பொழுதும் குங்குமம் விளங்குக" என்ற குறள்வடிவு ஆசியுடன் முதல்இதழ் ஆரம்பித்துள்ளது. இந்த ஆசி ஒன்றே, தென்னாட்டிலுள்ள சஞ்சிகைகளுக்கெல்லாம் இப்புதுவெளியீடு திலகமாய் விளங்கச்செய்ய போதுமானதாகும். முதல் இரு இதழ்களில் அடங்கிய கட்டுரைகள் இந்த நம்பிக்கைக்கு உரந்தருகின்றன. பெண்களது வாழ்க்கையின் வெவ்வேறு துறைகளைத் தழுவி, வியாசங்கள் சுருங்கிய எளிய நடையில் வந்துள்ளன. பக்தியையும் சமரஸத்தையும் திருப்புகழ்மணி கிருஷ்ணசாமிஐயர் விளக்க, 'கலைகளுக்கெல்லாம் இருப்பிடம் தமிழ்நாடுதான்' என டி. கே. சி. வற்புறுத்த சங்கீதவிஷயத்தில் பேராசிரியர் ஸ்ரீ பி சாம்பமூர்த்தி தொண்டாற்ற, வைத்தியப் பகுதியில் டக்டர் குமாரி நாமகிரி பணிசெய்ய. சரித்திர ஆசிரியை ஸ்ரீமதி வஜ்ரேஸ்வரி பழமையையும் புதுமையையும் படம்பிடிக்க, நம் சமூகத்தை நசுக்கும் வரதக்ஷிணை முதலிய கொடுமைகளை ஸ்ரீமதி ஜானகி கிருஷ்ணன் உணர்ச்சியுடன் கண்டிக்க, அரிய புது இலக்கியங்களை வித்வான் ஸ்ரீமதி பாலாம்பிகை,

ஸ்ரீமதி பத்மாவதி முதலாம் அநேகம் பெண்கள் சிருஷ்டிக்க, ஆசிரியையின் வேலை ஆனந்தமாய் முடிந்துள்ளதெனலாம்.

ஸ்ரீமதி விசாலாக்ஷி பத்திரிகை உலகில் மாத்திரமல்ல பக்தர் உலகிலும் புகழ்படைத்தவர். சாது ஸ்ரீ முருகதாசரின் பக்தையாய் கொழும்பு சத் சங்க அன்பர்களுடனும் அத்யாத்ம உறவு பூண்டவராவர். 'குங்குமம்' முதல் திலகத்தின் 7-ம் பக்கத்தில், சௌந்திரம் கேட்டதுடுக்கான கேள்விக்குக் கொடுக்கப்பட்ட பதிலானது ஆசிரியையின் நிஷ்காமியப் பண்பைத்தெற்றென விளக்குகின்றது 'குங்குமம்' தமிழ்நாடெங்கும் பரவி, மங்களம் நிலவச்செய்யுமாறு தென்னாட்டைக்காக்குந் தெய்வ சக்திகளான காமாக்ஷி, உண்ணாமுலையுமை, சிவகாமி, மீனாக்ஷி, கன்னிக்குமரி, முதலியோரை வேண்டுகின்றோம்.

---

### கந்தபுராணச்சுருக்கம்.

ஆக்கியோன்: பண்டிதர் திரு த. குமாரசுவாமிப்பிள்ளை, ஸ்ரீ ராமநாத வித்தியாலயம், சுண்ணாகம்

பண்டிதர்கள் மாத்திரமன்றி, பள்ளிக்கூடப் பிள்ளைகளும் படித்துப் பயன்பெறக்கூடிய முறையில், எளிய நடையில் எழுதப்பெற்ற இச்சிறுநூலைக்கண்டு அளவற்ற ஆனந்தமடைகின்றோம். காலதேவி வேண்டிநிற்பது இவ்வித வெளியீடுகளையேயாம். எங்கள் பழைய புராண இதிகாசங்களெல்லாம் இவ்வித உருக்கொண்டு வித்தியாசாலைகளில் சமயபாடப்புத்தகங்களாய் அமையக்கூடுமென்பதற்கு திரு. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் அருமையாக வழிகாட்டியுள்ளார்.

சுண்ணாகம், திருமகள் அழுத்தகம் இப்புத்தகத்தை மிகவும் அழகாய் அச்சிட்டுள்ளது. ஆனந்தாஸ்ரமம் சுவாமி ஸ்ரீ ராமதாஸரின் ஆங்கிலப்பாடல்களை, திரு. யோகர் சுவாமிகளின் ஆசிகொண்டு தமிழில் மொழி பெயர்த்து திருஅருள்மொழி யென்ற நூலாக அன்பளிப்பாகவழங்கிய முறையிலேயே இந்த நூலும் வெளிவந்து பரவியுள்ளது. எமக்கு அனுப்பப்பட்ட பிரதிகட்கு. மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறோம்.

முருகன் தமிழரின் ஆதித்தெய்வம். அப்பெருமான் சைவக்கடவுளானது எத்தனையோ நூற்றாண்டுகள் கழித்தேயாம். அவரது சரிதையும் அற்புதத் திருவிளையாடல்களும் தமிழ் பேசும் மக்கள் யாவரும் அறியவேண்டியவையே கதிர்காமத்தில் இன்னும் நடக்கும் சமரஸ வழிபாடே போதிய சான்றாகும். பழனி ஆண்டவன்மீது பிற்காலத்தில் தோத்திரங்கள் பாடியுள்ள பக்தர்களுள் அநேகர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த தமிழர்களேயாம்.

---

## செய்தித் திரட்டு.

### வாரவழிபாடு.

இந்த வழிபாட்டுக் கூட்டங்கள் சென்ற இதழில் குறிப்பிட்ட இடங்களிலெல்லாம் ஒழுங்காய் நடந்துவருகின்றன. அத்தோடு, இந்த மாசத்தில் கீழ்க்கண்ட இடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன:—

**இரத்தினபுரி:** சிவன்கோயில். **நுவரெலியா:** முத்துமாரியம்மன்கோயில், **வெள்ளவத்தை:** சம்மான் கோட்டார் ஸ்ரீமாணிக்கவிநாயகர்கோயில். **வதுளை:** சரஸ்வதி வித்தியாசாலை, **மன்னார்:** பிள்ளையார்கோயில். **கொட்டியாக்கலை:** சுப்பிரமணிய சுவாமிகோயில்.

---

### திருவெம்பாவைப்பூசையை அஞ்சலிசெய்தல்.

நிகழும் சர்வதாரி௵ கார்த்திகை௴ 23ந் தேதி தொடக்கம் மார்கழி 3-ந் தேதி வரைக்கும் (8-12-48—17-12-48) திருவெம்பாவைப் பாடல்களும் பூசையும் வெள்ளவத்தை, சம்மாங் கோட்டார் ஸ்ரீமாணிக்கவிநாயகர் ஆலயத்திலிருந்து தினம் காலை 7—7-30 கொழும்பு ரேடியோ நிலையத்தாரால் அஞ்சல் செய்யப்படுகின்றன. இந்த நிகழ்ச்சியிலும் ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமிகோயில் கூட்டுப்பிரார்த்தனையை மாசமொருமுறை அஞ்சல் செய்வதிலும், கொழும்புச் சைவர்கள் தமிழ் நாட்டிற்கே முன்மாதிரி காட்டியுள்ளனரென மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். இத்தொண்டில் அபார முயற்சிகாட்டிவரும், ஒலிபரப்புநிலைய அன்பர்கட்கு இலங்கைவாழ் இந்துக்கள் பெரும் கடமைப்பட்டுள்ளனர்.

---

### சென்னை சைவசித்தாந்த மஹா சமாஜத்தின் நாற்பத்து மூன்றாண்டு நிறைவு விழா.

இந்தச் சமாஜத்தின் நாற்பத்துமூன்றாவது வருஷ மகாநாடு முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நடக்க திருவருள் பாலித்துள்ளது. மகாநாடு டிசம்பர் 27-ந் தேதி ஆரம்பமாகி 29-ந் தேதி முடிவுபெறும். தென்னிந்தியாவிலிருந்து நூறு பிரதிநிதிகள் 25-ந் தேதி மாலை தலைமன்னார்வந்து சேர்வார்களென அறிகின்றோம்.

மகாநாட்டுக்குத் தலைவராய் சைவசித்தாந்த சமாஜத்தினது காரிய தரிசியாயிருந்து நீண்டகாலமாக அரிய சைவத்தொண்டாற்றிய வரும், உயர்தர வழக்கறிஞரும் ஆகிய உயர்திரு. ம பாலசுப்பிர மணிய முதலியார் B. A. B. L. அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவருக்கும் ஏனைய பிரமுகர்கட்கும் நல்வரவு கூறுகின்றோம். மகாநாடு சிறப்புடன் நிறைவேறுமாறு இலங்கையின் சுத்த சமரஸத் தெய்வமான கதிர்காமக் கந்தனின் திருவருளை வேண்டுகின்றோம்.

---

## ஸ்ரீரமண ஜயந்தி.

இந்த ஜயந்திவிழா இலங்கையில் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறும்.

18-12-48. மாலை 6 மணி. டீல் பிளேஸ், கொள்ளுப்பிட்டி.
,, ,, 6 ,, நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாசாலை.
19-12-48. காலை 7-30 மணி. வெள்ளவத்தை, 42-ம் ரேட்டில், கொழும்பு சத்சங்க அன்பர்களால.
25-12-48. மாலை 5 மணி வதுளை.
26-12-48. காலை. 10 மணி. நனுஓயா.
26-12-48. மாலை. 5 மணி. நுவரெலியா.

---

48,ம் பக்க தொடர்ச்சி.

ஆதியுமந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியைப்பற்றித் தாய்மார் பாடிய பாடலைக்கேட்டு விம்மி விம்மி மெய்ம்மறந்து படுக்கையில்புரண்டாராம். பார்த்தார்மணிவாசகப்பெருமான் இக்காட்சியை. திருவண்ணாமலையில் அருளிய திருவெம்பாவையில் முதலாவது பாடலாக இக்காட்சியை அமைத்துவிட்டார். இப்போ பாடலைப் பாருங்கள்.

ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென் னே
ஈதே யென் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

# ஆத்மஜோதியின் ஜீவியசந்தா ஆதரவாளர்கள்.

—:—:—:—

## பிழைதிருத்தம்—சென்ற சுடரில்

திரு. ச. குகப்பிரகாசம் என்றிருந்ததை திரு. ச. குகப்பிரசாதம் எனத்திருத்தி வாசித்துக்கொள்க.

17 - திரு. செ. சிவசம்பு ஓவசியர். கடியன்லீனு, கொத்மலி.
18—திரு. கே. குமாரவேலு எம். பி. பூண்டுலோயா.
19—திரு. நா. கர்ணையா றெயில்வே பரந்தன்.
20—திரு. எம். துரைசாமி டிறேத்றன் எஸ்ரேற் கொட்டகலை.
21—திரு. கே. சிவகுரு றெயில்வே நாவலப்பிட்டி.
22—ஸ்ரீமதி. டி. சுப்பிரமணியசுவாமி அரசினர் பாடசாலை கோப்பாய்
23—திரு இ. சிவஞானசோதி, இலங்கை வங்கி, கொழும்பு
24—திரு. வீ. இரத்தினம், புகையிரதப்பகுதி, கொழும்பு

---

## அன்பர்களுக்கு.

—:-:—

ஆத்மஜோதி ஆதரவாளர் யாவருக்கும் எமது அன்பு வணக்கமும் நன்றியும் உரித்தாகுக. ஜோதியின் 1,ம் சுடரில் 1000 பிரதிகள் அச்சிடப்பெற்றன. வெளிவந்த மூன்றாந் தினமே உள்ளூர் அன்பர்களுக்குத்தானும் பிரதிகள் இல்லாதவாறு வெளியூர் அன்பர்கள் செய்துவிட்டார்கள். தமிழ்நாட்டின் பற்பல பாகங்களிலும் கைமாறு கருதாது ஆத்மஜோதிக்காக உழைக்கும் அன்பர்கள் யாவருக்கும் ஜோதியின் திருவருள் கிடைப்பதாக. 2-ம் சுடர் 1500 பிரதிகள் வெளிவருவதிலிருந்தே அன்பர்களின் ஆதரவு ஆத்மஜோதிக்கு எவ்வளவு இருக்கிறதென்பது தெரியக்கிடக்கிறது.

வாழ்க ஜோதி.

---

கௌரவ ஆசிரியர். திரு. க. இராமச்சந்திரன் பதிப்பாசிரியர், நா. முத்தையா, 79/6 டொலஸ்பாகே ரோட், நாவலப்பிட்டி [சிலோன்] நாவலப்பிட்டி, சரவண பிரஸில் அச்சிடப்பெற்றது. 15-12-48.
1500 பிரதிகள்.

# யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

## இயற்றியது.

**1 நாவலர் பெருமான்** 3—0

சிவத்திரு ஆறுமுக நாவலர் வரலாறு. எந்த உள்ளத்தையும் வீறுபடுத்தும் சக்தி வாய்ந்தது. நாவலர், "தமிழ்; சைவம்" என்றே உயிர்த்தார் இப்பெரியார் வரலாறும் திரு மொழிகளும், அருட்பணித் திறனும் இந் நூலில் நன்கு விளங்கும்.

**2. யோக சித்தி (மூலமும் உரையும்)** 3—0

ஆசிரியர்—கல்வி, சுகாதாரம், அரசியல், சமுதாய சீர்திருத்தம், கிராம சேவை, பத்திரிகை, காவியம், யோகம் முதலிய பல துறைகளில் வாழ்ந்து பெற்ற அனுபவங்களெல்லாம் இந்நூலில் அடங்கியுள்ளன.

**3. பாரத சக்தி மகா காவியம் (ஐந்து காண்டங்களும்)** 15—0

இந்நூல் உலகப் பெரியார் வரலாறுகள், எல்லாச் சமய-சன்மார்க்க யோக மார்க்கங்களின் சாதனை முறைகள், சுத்தயோக சித்தி ரகசியங்கள்; கலை, பொருளாதாரம், சமயம், அரசியல், தொழில், முதலிய எல்லாத் துறைகளிலும் மனிதன் பூரணம் பெற்று அதிமனிதனை வாழும் வழிகள் அடங்கிய புதிய காவியச் சோலை 1000 பக்கங்கள்

**4. இதுதான் உலகம் (அற்புத நாவல்)** 8—0

மனிதன் பிறந்தது முதல் இறக்கும் மட்டும் எத்தனையோ அனுபவங்களைப் பெறுகிறான்; எத்தனையோ கனவுகள் காண்கிறான்; இடர்களால் வருந்துகிறான். இன்ப துன்பச் சுழல்களில் சிக்கியலைகிறான். வீராசாமி என்ற லட்சிய புருஷனைக் கொண்டு உலகம் தந்த அனுபவங்களின் தொகுப்பே இந்த நூல். காதல், கல்வி, கலை, சன்மார்க்கம், தொழில், சமுதாயம், அரசியல்—முதலிய எல்லாத் துறைகளிலும் வீராசாமி பல அதிசய அனுபவங்களைப் பெறுகிறான்; உலகுடன் அறிவுப்போர் புரிகிறான். அவன் பெற்ற அனுபவங்களை, தானே உருக்கமாகச் சொல்லுகிறான். வீராசாமியின் சுயசரித்திரம் படிப்பவர், தாமே வீராசாமி என்று உணர்வார்கள்; அவ்வளவு இயற்கையாக அவன் வாழ்க்கைச் சித்திரம் அமைந்திருக்கிறது. இந்நூல் தற்கால வரலாற்றுக் காலக்கண்ணாடி யாகும். வீரசிதம்பரம் பிள்ளை காலம் முதல் ஜவஹர் தலைமையில் சுதந்தர சர்க்கார் ஏற்பட்ட காலம் வரையில் உள்ள தேச நாட்டுச் சரிதையும் சுபாஷ் போஸின் இந்திய தேசிய ராணுவ வரலாறு முழுதும் வருகிறது. இது தமிழுக்கே புதிய இலக்கியக்கோவை.

புதுயுக நிலையம்,—புதுச்சேரி.